ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2441/13 - 2025 ජුනි මස 18 වැනි බදාදා - 2025.06.18

*2441/13 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (அ) ஆம் பிரிவின் கீழ் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கேட்டு விலகியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், கருவலகஸ்வெவ பிரதேச சபையின் இலக்கம் 01 - பஹல புளியன்குளம் வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இலந்தாறி புறகே விக்ரமபால என்பவர் அங்கம் வகிக்கின்ற தேசிய மக்கள் சக்தி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கருவலகஸ்வெவ பிரதேச சபையின் இலக்கம் 01 - பஹல புளியன்குளம் வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக நவரத்ன முத்தலாகே நீல் நவரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான சிரிநிவசகே லக்ஷித ருவன் ஜயநாயக்க ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு நவரத்ன முத்தலாகே நீல் நவரத்ன என்பவர் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் இலக்கம் 01 - பஹல புளியன்குளம் வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**எஸ். எல். ஆர். ஜயநாயக்க,**<br>
தெரிவத்தாட்சி அலுவலர்,<br>
கருவலகஸ்வெவ பிரதேச சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,<br>
புத்தளம்,<br>
*2025, யூன் 17.*

EOG *06 - 0134*

1A - G 44565 — 05 (2025/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*